**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**O.S. No. 117 /2009**

**C/W. O.S. 167/2021**

**தேதி :** 07.06.2023

**(பி.வா.சா.–4) – சிவசுப்பிரமணியன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை : ( வாதி தரப்பில்)

நான் விவசாயம் செய்கிறேன். நான் சொந்த பூமியில் விவசாயம் செய்கிறேன். முருகவேல் செட்டியார் எழுதிய உயிலில் என் தகப்பனார் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். 2–வது சாட்சியாக என் தகப்பனார் கையொப்பம் செய்துள்ளார். திண்டுக்கல் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.1/2007 வழக்கின் இதே உயில் தொடர்பாக தான் நான் சாட்சியம் அளித்துள்ளேன். அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் நான் மேற்படி வழக்கில் சாட்சியம் அளித்தேன். மேற்படி வழக்கில் அழைப்பாணை வராத நிலையில் நான் பிரமாண வாக்குமூலம் தயார் செய்து சாட்சியம் அளித்துள்ளதாக சொன்னால் எனக்கு சாட்சி சொன்னது மட்டும் நினைவில் உள்ளது அவ்வழக்கில் சம்மன் வந்ததா என்பது குறித்து எனக்கு நினைவு இல்லை. என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலம் அ.வ.எண்.1/2007 வழக்கில் நான் தாக்கல் செய்தது தான். என் அப்பா தமிழில் கையொப்பம் செய்வார். என் அப்பா அந்த காலத்தில் 2 வகுப்பு, 3–ம் வகுப்பு படித்துள்ளார். என் தகப்பனார் சாட்சி கையொப்பத்தின் கீழ் ஆத்தூர், கொழுமம் போஸ்ட், உடுமலை பேட்டை தாலுகா என்ற முகவரியை குறிப்பிட்டுள்ளார். முருகவேல் செட்டியார் நண்பர் M.K.Muthu வீட்டில் உயில் சம்பந்தமாக இரவு பேசிக்கொள்கிறார்கள். காலையில் பழனி வந்து உயில் எழுதி விட்டு மறுபடியும் இரவு அது சம்பந்தமாக பேசினார்கள். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.–71 ஆவணத்தில் உள்ள 2–வது சாட்சி கையொப்பம் என் தகப்பனாருடையது தான். M.K.Muthu வின் வீட்டில் மறு நாள் உயில் குறித்து பேசிய போது என் அப்பா, முருகவேல் செட்டியார் உள்ளிட்ட 10, 15 நபர்கள் அங்கு இருந்தார்கள். பி.சா–3 கோமதி நாயகம் அப்போது அங்கு இருந்தார். 2009–ம் வருடம் என் தகப்பனார் இறந்து விட்டார். உயில் 1999–ம் வருடம் எழுதப்பட்டது. உயிலில் சாட்சி கையொப்பமிட்டதை நான் நேரடியாக பார்க்கவில்லை. 2 –ம் பிரதிவாதி மற்றும் வாதி இருவருமே எனக்கு உறவினர்கள். வாதிக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு எதுவும் இல்லை. தற்போதும் பேசிக் கொள்கிறோம். என் அப்பாவின் கையொப்பத்திற்கு ஆதரவாக வேறு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. எனது சாட்சியமும், உயிலும் சந்தேகத்துக்கு உரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2023.06.08 18:15:36 +0530

கூடுதல் சார்பு நிதிபதி,
பழனி.